ஓலை 34 | ஓசை 130 | பிப்ரவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே யொழிய விடல்.**

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவு நிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.

**Translation:**

Though only good it seem to give, yet gain
By wrong acquired, not e'en one day retain.

**Explanation:**

Forsake in the very moment (of acquisition) that gain which, though it should bring advantage, is without equity.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# வரம்

நானொருநாள் குளத்தில்
தவளையாய் இருந்தேன்.
அதற்கு
இரண்டொரு நாள் வானத்தில்
பறவையாய் பறந்து
பொழுதைக் கழித்தேன்.
அதன் மறுநாள் வனத்தில்
விலங்காய் சுற்றித் திரிந்தேன்.
பின்வரும் நாள்
ஒரு மானிடனிடம் உபகரணமாய்
அங்குமிங்கும் அலைந்தேன்.
அதன் பின்வரும் மறுநாளில்
பெரும் போராட்டத்திற்கு பிறகு
செடியாகி சிலகாலம்
மரமாய் வாழ்ந்தேன்.
நான்
இருந்ததிலும் கழித்ததிலும்
மரமாய் வாழ்ந்த
தன்னலமற்ற வாழ்வுதான்
வரமாய் அமைந்தது
எனக்கு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# அன்பைத் தவிர எதுவும் சாத்தியமில்லை

மலையடிவாரத்தில் மோதும்
சிறு அலையாய்

அலையினிலே மிதக்கும்
சிறு பூவாய்

அச்சிறு பூவினிலே இருக்கும்
சிற்றெறும்பாய்

சிற்றெறும்பின் பாதங்களில் ஒட்டிய
மகரந்தமாய்

மகரந்தத்தில் சேர்ந்து விட்ட
வாசமாய்

வாசனைகளில் படரும்
நினைவுகளாய்

நினைவுகளின் தொடரியில்
பெருமலைகளாய்

பெருமலையின் அடியாழத்தின்
உறுதியாய்

உன் அன்பைத்
தக்க வைத்திருக்கிறேன்

அன்பின்றி எதுவும் இல்லை
அன்பின்றி எதுவும்
சாத்தியமே இல்லை



அன்போடு
வசப்படுத்த வசப்படுத்த
நிரம்பி வழிவது
பேரன்பு

அது உலகத்தின் பொதுமறை
சாதிமதமற்ற வேதம்.

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# இடைத்தேர்தல்

இலவசங்கள் தேவையானதால்
இதற்கு பெயர் இடைத்தேர்தல்

கோடி கோடியாய் ஊழல் செய்ய
கொலுசு வழங்கிய இடைத்தேர்தல்

ஐந்து வருடம் அடிமையாக்க
அதிகம் வழங்கிய இடைத்தேர்தல்

நாட்டுக்குள் லஞ்சம் வாங்கும்
அதிகாரிகள் குற்றமென்றால்
ஓட்டுக்கு லஞ்சம் வாங்கும்
மக்களும் இன்று குற்றமே

பாமர மக்களும் பணத்தால் மாறினார்கள்
பணக்கார மக்களும் பயத்தால் மாறினார்கள்

அடிப்படை தேவைகளை விட
அடுத்த வேளை பிரியாணி முக்கியம்

இலவச கல்வியை விட
இரவில் குடிக்கும் சாராயம் முக்கியம்

அரசியலில் தவறு செய்பவர்களை விட
அரசியலுக்காக தவறு செய்பவர்களே அதிகம்



மக்களை சோம்பேறியாக்கி
மனிதனை ஏமாளியாக்கி
காசை காகிதமாக்கி
இலவசத்தை இறைவனாக்கி
நண்பனை எதிரியாக்கி
எதிரியை விரோதியாக்கி
அன்றாட பிழைப்பை
அடகு வைத்து
அடுத்த தலைமுறையை அடிமையாக்கி
செய்யும் அரசியல்
என்றுமே
மக்களுக்காக அல்ல
சில
மனிதர்களுக்காக மட்டும்

கவிஞர் தேடல் மணி, நாமக்கல் மாவட்டம்

# தேடாமல் கிடைத்த முத்தமிழ்

கலைஞர் கருணாநிதி
தயாளு அம்மா ஈன்றெடுத்த முத்தே
உன் ஆடையே போல உனது உள்ளமும் தூய்மையே
அமைதியும் அடக்கமும் சேர்ந்து உள்ளத்தில்
வெற்றி என்னும் வேகத்தைக் கொண்டதே
தொண்டருக்கு எல்லாம் தலைவனாக இருந்து
எல்லோரையும் அன்பால் அரவணைத்து சென்றாய்
மிசாவில் நீந்தி மேயரெனும் தங்கமாய் ஜொலித்தாய்
மணவறை கண்ட மகிழ்ச்சிக் கூட காணாமல்
சிறைக்கூடம் சென்ற சிங்கமே
இல்லறத்தை விடவும் தமிழ் நாட்டின்
நல்லறத்தைக் காண துடித்தாய்
பதவியேற்றதும் ஐந்து கோப்புகளில் முத்தான
கையெழுத்து இட்டு தமிழகத்தை திரும்பி பார்க்க வைத்தாய்
கொரானாக் காலத்தில் உயிருக்காக போராடி கொண்டவர்களின்
உயிரைக் காப்பாற்றிய பொக்கிஷமே
எத்தனை குடும்பங்கள் உங்களது பெயரை சொல்லிக் கொண்டிருக்கிறது
தங்க தலைவரே மகளிருக்கு பேருந்தில் இலவச பயணம்
இல்லம் தேடும் கல்வி மக்களைத் தேடி மருத்துவம்
இன்னுயிர் காப்போம் திட்டம்
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதி திட்டம்
நான் முதல்வன் உங்கள் தொகுதியில் முதலமைச்சர்
நம் பள்ளி நம் பெருமை திட்டங்கள்தான் எத்தனை எத்தனை
ஓராண்டில் மக்களை எல்லாம் அசர வைத்து
மனதை குளிர வைத்ததே
முழு நேரமும் துயில் கொள்ளாமல் உழைத்தாய்
எதற்கும் அஞ்சாதவரே
நிமிர்ந்த நன்னடை நேர்க் கொண்ட பார்வை
கொண்டு கொரானாக் காலத்தில் மொத்த
தமிழகத்தையும் தலை நிமிர்த்தி உயர்த்தி வாழ வைத்தாய்
தமிழகம் தலை நிமிர்ந்து வாழ்கிறது என்றால்
நீங்கள் செய்த சாதனையை
சூரியன் தினமும் உதித்துக் கொண்டு தான் இருக்கும்
ஓய்வு என்பதே கிடையாது
தங்க தலைவன் ஆட்சி செய்யும் வரை தமிழ்நாடு என்றும்
மின்னிக் கொண்டு தான் இருக்கும்
சரித்திர ஏடுகள் எல்லாம் உம் சாதனைகளை பற்றி
பேசிக் கொண்டு தான் இருக்கும்
இன்று போல் என்றும் பல்லாண்டு
பல நூறாண்டு வாழ வாழ்த்துகிறோம்
வாழ்க உம் புகழ் வளர்க தமிழகம்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# அச்சம் தவிர்

அச்சம் கொண்டால் சூனியமடா
அடி மனதின் கோழை எண்ணமடா
அடிமையாக்கி பிணமாக்கும் ஜாக்கிரதையடா
அடங்கி வாழ வைக்கும் ஏமாளியடா

அச்சம் வென்றால் ஏழ்மை உனதாடா
அடுத்தவரை சிரிக்க வைக்கும் கவனமடா
அழியாத நச்சு கிருமி தானடா
அதை அழித்தவன் வெல்லான் பூமியைதானடா

அச்ச நெஞ்சம் அழுகிய பழமடா
அவதியுற்று துர்நாற்றம் வீசும் தினமடா
அமைதியின்றி பதற்றம் தொற்றிக்கொள்ளும் தானாகவேடா
அச்சுறுத்தி அழவைக்கும் பேயும் அதுவடா

ஆட்டிப் படைக்கும் எமனும் அவனடா
ஆடிநிற்பாய் வேதனையால் நீயும் தானடா
ஆக்கம் கொள்ளாது எரித்திடும் தீயடா
ஆதாயம் அற்று விழவைக்கும் அணுகுண்டடா

அச்சம் கொண்டு வாழ்வது நரகமடா
அரச வாழ்க்கையையும் தட்டிப்பறிக்கும் கவனமடா
அட்டை போல் இரத்தத்தை குடிக்குமடா
அடங்காது அதன் பசி சாகடிக்கும்வரையடா




அச்சத்தை நீ எதிர்த்து போரிடுடா
அடங்கிடும் அச்சமும் உன் வீரத்தாலடா
அச்சமும் துச்சமாய் மாறிடும் தானாகவேடா
அழகாய் ஆள்வாய் ஞாலத்தை நீயடா

கவிஞர் ஜஸூரா ஜலீல்

# நம் பாதை போதை அல்ல

சரித்திரம் சொல்லப்போகிறது
ஒரு சமுதாயம்
போதையின் காரணத்தால்
அழிந்த வரலாற்றை
மனித குல கோட்பாட்டை
சீர்குலைத்த போதை கலாசாரத்தை
பின்பற்றி நடந்த அறிவற்ற சமூகம்
அழிந்த கதையை
மது வேண்டாம்
புகைத்தல் வேண்டாம்
போதைப் பொருள்
பாவனை வேண்டாம்
என உயிர் அற்ற பதாகைகள்
உயிர் கொண்ட
மனிதர்க்கு சொன்ன
கதை சொல்லும்
புத்தகங்களும் நாளேடுகளும்



நலிந்து போன உடலோடும்
நம்பிக்கை இழந்த மனதோடும்
நாட்களை கழித்து வாழ்ந்த
செங்குத்தாய் நின்ற
இரண்டு கால் கொண்ட
பேசும் திறனுள்ள
சிந்திக்கும் மிருகங்கள்
பற்றி சொல்வார்கள்
வரலாற்று ஆய்வாளர்கள்
தங்கள் அறிக்கைகளில்
பரப்புரை செய்வார்கள்
நம் பாதை போதை அல்ல என்று
அழிந்து போன சமூகத்தின்
உதாரணம் சொல்லி

கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# கோடை வருகிறது

சிறுவயதில்
என்
முதல் ஓவியம்
ஒரு வானமும்
நீயும் மட்டும் தான்

உன்
தாகம் பற்றி
அறியா வயது



ஓவியத்தில் கூட
தண்ணீர்
வைக்கவில்லை
நான்

இப்போது
தினமும்
வைக்கிறேன்

உனக்கும்
தவிக்கும்
என்பதை
கற்றபிறகு

கேட்கா
பறவைகளின்
தாகம் தீர்க்கட்டும்
நம் ஒரு செயல்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# ஓய்வதில்லை

கடலில் அலைகள்
எப்படி ஓய்வதில்லையோ
அதே மாதிரிதான்
உன் நினைவலைகள்
எப்போதும் என்னுள் ஓய்வதில்லை.
நான் ஓயும் வரை
ஓயாது உன் நினைவுகள் மட்டும்.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# அழகிய நெருப்பு

எனக்குள் சிம்மாசனமிட்டு
என்னிதய வனத்தை ஆளும்
அழகிய நெருப்பே!

சிரித்திடும் மலரே கொஞ்சிடும் குரலே - உன்
ஒய்யார சிரிப்பினை காணும் கணம்தோறும்
சரிந்து விழுகிறேன்.
ஏக்கத்தில் தவித்திடும்



என் தாகத்தை - உன்
ஆயிரம் முத்தங்களின் ஈரம்
எனக்குள் தனல்விட்டு எரிந்து
உன்னையே நினைவுபடுத்திக்
கொல்லுதடி.

ஏனிந்த அவஸ்தையோ
நானென்ன தவறுசெய்தேன்
கடைக்கண் பார்வையில் உன்னை பார்த்ததற்கு
இப்படியொரு தண்டனை வேண்டாம் பெண்ணே!

எட்டிப்பார்த்த என்னிதயத்தை
உன்னிடம் விட்டு
எப்படிக் கடப்பேன்.

உன்முகம் கண்டிடும் மாலைநேரம் வரை
கடிகாரமுள்களும் ஏனோ மெதுவாகவே
வட்டமடித்து என் தவிப்பினை உன்னோடு ரசித்திட.


அணுவணுவாய் சித்ரவதையில் சிதைந்திடும் என்னிடம்
ஏதாவது பதில்சொல்லடி
இன்று மாலை வரையாவது
உன் நினைவினில் நானும் சாகாமலிருக்க.

கவிஞர் கோவை ஆனந்தன், கிணத்துக்கடவு

# எண்ணங்களின் அரசி!

வியக்க வைக்கும்
விந்தை நீ.

இரசிக்க வைக்கும்
அழகி நீ.



நினைவுகளில் நிறைந்த
நேசம் நீ.

உணர்வுகளில் கலந்த
உறவு நீ.

அன்பின் ஒளியோ
அமைதியின் நிழலோ

என் சிந்தையில் நுழைந்த
எண்ணங்களின் அரசி நீ!

கவிஞர் அகல் தாமரை "கவி",கமுதி

# இளந்தமிழே.. தாய்த்தமிழே..

இளந்தமிழே,
தாய்த்தமிழே,
இன்பச்சுனையே
இன்னருமழையே.




உலகஉருவே.
உவந்தசுவையே,
உண்டகனியே;
உயர்ந்த மலையே.

அழகுமலரே
அருமைமானே
அறிவியல்கலையே.
அணைப்புகதப்பே.

ஓர்மைபருவமே.
ஓங்கயசிகரமே.
ஆருயிர்உறவே;
ஆரணங்குவெட்கமே.

தேனிலவே,
தேனிசைசபையே.
தாங்கியமேகமே;
தரணியின்மகத்துவமே.

அறிஞர்மகிழ்வே
ஆசைத்தருவே
ஆடியஅணங்கே
ஆறாஅருவியே.

உறவின்மகிழ்வே
உன்னதஉயிர்ப்பே,
உதயக்கதிரே.
உலகக்குடையே.

முத்துக்குவியலே,
மூதுரைமுனியே,
முதன்மைக்கனவே;
மூவேந்தர்கொடையே.

சந்தத்தடாகமே,
சந்ததியர்பலியே,
சந்தனக்குழம்பே
சிந்தனைச்சிலையே.

கற்றவர்மொழியே,
கணினிமகத்துவமே,
ஆட்சிஅலையே;
ஆதாரத்தமிழே.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# துணிந்து நில்!

நீ வாழ்வது உன் வாழ்க்கை
உண்மையாய் வாழ பழகிக் கொள்
அறம் மறந்த அவனி இதில்
அவணி வேண்டும் நினைவில் கொள்
அநீதி பேய்கள் உன்னை ஆக்கிரமிக்கும்
அசத்திய வழிகளை அழகாய் காட்டும்
சத்திய பாதை நிச்சயம் வெல்லும்
துணிந்து நின்றால் உலகே மாறும்




கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# அம்மா

மூழ்கி
முகம் நாணி
மூச்சுத் திணறி
முத்தாய் பெற்றெடுத்து.

முகம் பார்த்து
முகம் மலர்ந்து
முத்தம் கொடுத்து
கட்டிப்பிடித்து கண்ணயர்ந்து.



கண்விழித்து
காவல் காத்து
பசியறிந்து
பால் கொடுத்து.

பிஞ்சு விரலை தொட்டுப்பார்த்து
துள்ளி விளையாடுவதை
பார்த்து ரசித்து
குப்புற கவிழ்ந்தபோது கூடப்படுத்து.

முட்டிக்கால் போடும்போது
முன்னே நின்று
கைபிடித்து
நடக்கவைத்து

தடுக்கி விழும்போது
தானும் சேர்ந்து துடித்து
முகம் கழுவி தலை சீவி
நெற்றியில் முத்தம்மிட்டு

என்னை நெகிழ வைத்த தாயே!
மீண்டும்
அந்த நாட்கள்
எனக்கு திரும்புமா?

**கவிஞர் சீனு செந்தில்,காட்டுமன்னார்கோயில்**

# கௌரவம்

கடமைகளை திட்டமிடுங்கள்
கடவுள் இருக்கிறார் நம்பலாமே!

காலை என்பதே அருமையானது
அவசரம் வேண்டாமே!

கிண்டலும் கேலியும் தேவையே
பிறரை புண்படுத்தாமலே!



கீரியும் பாம்புமாய் சண்டையும் வேண்டும்
அடுத்த நொடி கூடலுக்கே!

குறையை நிறையாக்குங்கள்
குறையில்லா எதுவுமே கிடையாதே!

கூடி வாழ்வதிலும் நன்மையும் உண்டு
பிரச்சினையும் உண்டு!

கெட்டதிலும் ஓர் நன்மையுண்டு
கெட்டது நடந்தால்தான் நன்மை விளங்குமே

கைக்கு மீறிய பிரச்னைக்கு
நீங்கள் பொறுப்பில்லையே!

கொடிய நோயையும் உங்கள் நிதான
நித்திய வாழ்வு தோற்கடிக்குமே!

கோபத்தில் நீங்களே
கொலையாகிறீர்களே!

கௌரவம் பணம்பகட்டில் அல்ல
உங்கள் மனதில்,எண்ணத்தில்,செயலில்,
வார்த்தையில்,வாழ்க்கையிலே!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# இரு விழிகளின் சங்கமம்

உன் விழியில் தொலைந்த நான்
உன் வரவிற்காக காத்திருக்கிறேன் அன்பே!
நம் வார்த்தைகளை விட
நம் விழிகள் காதல் கொண்டு
பேசும் பாஷைகள் ஒன்றித்து
சங்கமித்து கலந்திடுதே!

உன் விழிகளில் எனை தேடி
நிமிடங்கள்தோறும்
தித்திக்கும் என் மனதிடம்
தோற்றுக்கொண்டே இருக்கிறேன்.
உன் விழிகளில் எனக்கான காதலை கண்டு
மெய்சிலிர்த்து போனேன்!

என்ன தவம் செய்திட்டேன் நான்
உனை கண்ட நொடி நான் வீழ்ந்தது
எனக்கே உரித்தான நாணம் ஒட்டிக்கொண்டதே!
உன் விழியோடு என் விழியை கலந்திடும் நேரம்
ஊற்றுக்கண்ணின் அடிஆழத்தில் இருந்து
நேசம் வழிந்தோடி வருவதை
தடுக்க இயலாது விக்கித்து நின்றேன்!
இரு விழிகளின் சங்கமத்தின்
அசைக்க முடியா காதலாலே!

உன் விழியில் விழுந்து நீந்தும்
என் காதலை திகட்ட திகட்ட
உனக்கு அளிக்க காத்திருக்கிறேன் அன்பே!
நான்கு கரு விழிகள் நடனமாட
நம் காதலும் மேடையானதோ!
இமைகளின் துடிப்பும் இங்கே
சலங்கை ஒலிகளானதோ!



விழிவரிசை தாக்கத்தில்
காற்றின் அலைவரிசையிலும்
கவன சிதறல்கள்!
உன் விழி தீண்டல்களை
மௌனியாய் மொழி பெயர்த்திடவே
வாய் மொழி மறந்த ஞானியாய் நானும்!

தேகம் உரசிட உறைந்திடும் சூடும்
அகம் நிறைந்ததோ
அமைதியான அவளவன் பார்வையில்!

கவிஞர் ஜெனி கிரேஸி,மதுரை

# புனைவுலகம்


நிழலும், கனவும் அரங்கேர
காணாததும், கண்டு களித்ததும்
கண் முன் காட்சியாக.
அவள் அவனாக
அவன், அவளாக
எதுவுமாக முடியும்.
தவறுகள் சரியென
மரபுகள் தொலைத்து
அரிதாரம் பூசாமல்
அவதாரங்கள் கொண்டு
நிதர்சன நிகழ்வுகளிலிருந்து
சற்றே தனித்து.
விதியை மாற்றி
மதியை முடுக்கி
மற்றுமொரு பிரம்மாவாய்
கண்ணீருக்கும், வலிகளுக்கும்
வடிகாலாக.
லட்சியத்திற்கு தூண்டுகோலாக
வாசகர்களின் நேரங்களை
தனதாக்கி, இளைப்பாற
இடமளிக்கிறது.



கவிஞர் சாந்தி

# தனி மரம்

ஆல்போல் தழைத்து
அருகுபோல் வேரூன்ற
அனைவரும் வாழ்த்திட
அருமையான திருமணம்
ஆணும் பெண்ணுமாக
ஐந்தாறை ஈன்று
மக்களைப் பெற்ற
மகராசியாக வாழ்த்த
மனமொத்த தம்பதியராக
மாளிகையில்லாவிடினும்
மகிழ்ச்சியாக வாழ்ந்து
மக்களை கரையேற்ற
மணாளனின் மறைவுக்குபின்
ஆலமரமாய் தழைத்தவளின்
விழுதுகள் வேலையென
விலகிச் சென்றிட
அருகாய் வேரூன்றியவள்
சருகாய் மாறினாள்
தனிமரம் தோப்பாகாதாம்
தோப்பையே உருவாக்கியவள்
தனிமரமானதேனோ?



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# இன்னா செய்யாமை

(அதிகாரம் : 32)




பெருஞ்செல்வம் பெறுவதாயினும்
பிறர்க்கு ஒருபோதும்.
துன்பம் தராதிருத்தலே
தூயோரின் கொள்கையாம்.

வெறுப்புடன் ஒருவனுனக்கு
துன்பம் இழைத்திடினும்.
திரும்ப துன்பமிழைக்காதிருத்தலே
அறிவாளரின் கொள்கையாம்.

துன்பமிழைக்காதிருந்தும் தனக்கு
தீங்கிழைத்தவர்க்கு தானும்.
துன்பமிழைக்க நேர்ந்தால்
தப்பமுடியா துன்பம்வரும்.

தீங்கிழைத்தோரை தண்டித்தலென்பது
அவர்நாணமுற நல்லுதவிசெய்து.
அவர்தீங்கையும் தன்நன்மையையும்
மறந்துவிடல் என்பதாம்.

இன்னுயிர்க்கு வருந்துன்பம்
தன்னுயிர்க்கு எனக்கருதி.
அவ்வுயிர் காக்காவிடத்து
நல்லறிவினால் என்னபயனோ?

தீச்செயல் என்றறிந்து
அச்செயலை பிறரிடத்து.
எப்போதும் செய்யாதிருத்தலே
தலைசிறந்த அறமாம்.

தன்னுயிர்க்கு துன்பமென்றுணர்ந்தும்
இன்னுயிர்க்கு அதைச்செய்தல்.
என்னகாரணம் கருதியோ?
அதில்விளை பயனென்னவோ?

இன்னுயிர்க்கு முற்பகலில்
துன்பமிழைத்தால் உனக்கு.
பிற்பகலில் அதேதுன்பம்
தாமாகவே வந்துசேரும்.

துன்பமெலாம் துன்புறுத்துவோர்க்கே
சென்று சேருமாதலால்.
துன்பமின்றி வாழவிரும்புவோர்
இன்னுயிர்க்கு துன்பமிழையார்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# முகவரி தேடி

நீல வண்ணம் பூசிய தெளிவான
ஆகாயம் போல்

பச்சை பசேலென பரந்து
நிலமதை கொள்ளை கொண்ட
புல்வெளி போல்

தனக்குள் இருப்பதை அச்சு
பிசகாமல் பிரதிபலிக்கும்
தெளிந்த நீரோடை போல்

பிறர் கொடுத்ததை
இரு மடங்காய்
திரும்ப கொடுக்கும்

என் கோபக்கார அழகன்
ஆதவன் போல்



எவரோ விதைத்த விதை
ஒன்றை தனக்குள்
உள்வாங்கி விருட்சமாக

வழி செய்த பூமி அன்னை
அவளை போல்

யாவரும் பாகுபாடின்றி
சுவாசம் கொள்ள உதவும்
உருவமில்லா காற்றை போல்

இயற்கையின் வழியை
கருத்தில் கொண்டு

முடிவுள்ள வாழ்வில்
முடிவில்லா அன்பை
விதைத்திடுவோம்

அன்பை மட்டும் அள்ளி
கொடுத்திடுவோம்.


கவிஞர் ரதி ஜெயராஜ்

# மகிழும் மலர்கள்

மஞ்சள்பூ மஞ்சத்தில் தஞ்சம் கொள்ளும்
மகிழ்வான சேதிகளை மனதால் சொல்லும்
மலர்சசெண்டு பரிசளித்து காதல் கொள்ளும்
மாசில்லா நேசத்தால் நெஞ்சை அள்ளும்

தேன்சிட்டு மலரதனை கவ்வும் காட்சி
தித்திக்கும் இதயங்களை இதமாய் வருடும்
பூவாசம் பரிமளிக்க இணையோடு நிற்கும்
பரவசத்தைப் பார்க்கையிலே மனங்கள் துள்ளும்

சிட்டுக்களின் சிருங்கார சல்லாபம் கண்டு
பட்டாம் பூச்சிகள் பறந்துதோடிச் சென்றனவோ ?
பாவப்பட்டு பறவையிலே கோபம் கொள்ளாமலே
பக்குமாய் விலகும் பாங்கு அற்புதமே.



கவிஞர் ஹாஜறா கலீலுர் ரஹ்மான்,காத்தான்குடி

# புகைப்படமின்றி

துயில் நிதானமாய்
நிகழ்ந்தேறும் இமையின் அசதி.

மதி விழித்தும்
மெய் மறத்தும் கிடந்திருக்க.

கில்லாடி கனவுகள்
நினைவுகளை சுமந்த சுவடாய்.

நித்தம் நித்தம் உயிர் வாழ
துடித்துடித்து விழிப்பும் உயிர் கொள்ள



புன்முறுவல் சுமந்த அதரங்கள்
புகைப்படமின்றியும் புன்னகைக்க
வேண்டுமே.

அடுத்தவர்க்கென சுமந்த சிடுசிடு
வதனங்கள் ஓய்வுற.

எக்கணமும் கலகலப்பாய்
முத்துக்களை சுமந்த சித்திர நகை
அணிந்திட ஆசையே.

புகைப்படமின்றி
பூவையின் இதழ் நிதர்சனமாய்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# பழமொன்றியுக்கள்

நேற்றுவரை நீ யாரோ? நான்யாரோ?
இன்றுமுதல் நீ வேரே... நான் தண்டே....
"புது மனைவி".

---

மாமியார் உடைத்தாலும் மறுக்காது;
மறுமக உடைத்தாலும் மறைக்காது...
"மனசாட்சி"

---

உயரஉயர பறந்தாலும் ஊர்க்குருவிக்கு,
உசிரென்னவோ உள்ளூர் தான்.
"வெளிநாட்டு வேலை"

---

ஐந்திலே வளைக்கவில்லை,
ஐம்பதிலும் வளையாது.
"பிடிவாதம்"

---



பன்னீரா உங்களுக்கு?
கண்ணீர்தாம் எங்களுக்கு.
"காவிரி நீர்"

---

கல்லென்றால் கல்;
கடவுளென்றால் கடவுள்.
"கவிதை"

---

எந்தக்குழந்தையும் நல்லக்குழந்தையே,
அவர் சந்தனமாவதும், சாக்கடையாவதும்.
"கைபேசி வளர்ப்பினிலே "

---

கற்றது கைமண்ணளவு,
கல்லாதது கடலளவு.
"மழலையின் சந்தேகம்"

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# முடியவில்லை

வலி ஒன்று தொடருதே
வாழ்நாள் முழுவதும் மனிதா!
மன்னிக்க முடியாத
மனிதர்களும் மரணங்களும்
மீண்டும் மீண்டும்.

சமுதாய ஏட்டில் தனி
மனிதன் கண்ணீரில்
நாடும் மக்களின் ஏடும்.
பார்க்க முடியாத காட்சிகளும்
கேட்க முடியாத சொற்களும்
பேச முடியாத உரைகளும் முடிவில்லாமல்.



நல்லவர்களின் நயம் நாடகம் போடுவது
"கெட்டவர்களின் நாடகம் நயம் பேசுது"
புரியாத பூவிலங்காய் புத்தனாக பலரும்
"அறிந்தும் அறிவில்லாமல் பித்தனாக சிலரும்"



கலியுக பிறப்பில் நூதன அரங்கேற்றம் தினம்
மனிதா!
எண்ண முடியாத ஏழ்மையும்
"சொல்ல முடியாத கொடுமையும்"
பாதை தெரியாமல்
மரணத்தை தழுவும் பாதையும்
"கை நீட்டும் கரங்களும் தினம் தினம்"

வலியின் குரலின் உரை பெருஞ்செய்தியாக - நாட்டில்
புறத்தின் குரலின் உரை குறுஞ்செய்தியாக - ஏட்டில்
தட்டிப் பறிக்கும் தன்னலம்
எட்டிப் பார்க்கும் பொதுநலம்

கானல் நீராய் கண்ணீரும்
மாய லீலை வெந்நீரும்
ஒவ்வொரு மனிதன்
வாழ்க்கையில் சித்தாந்த
திகட்டில் தினம்

முடியவில்லை வாழ்க்கை
இன்னும் கலங்குதே காயம்
தொடரில் மண்ணுலகில் சிலர் மனிதா!
முடியவில்லை.

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# காதல் மீண்டும் புதிதாய்

என்றோ குட்டிபோடுமென ஒளித்து வைத்த
மயிலிறகைத்தேடிக் களைத்துப்போன நான்
வெறுப்பின் மிகுதியால் தூரயெறிந்த
அந்த கால்குயர் கணக்குநோட்டிலிருந்து
சிதறிவிழுந்தன நீ தொலைத்த
அந்த குட்டிக் கரும்பொட்டுக்கள்.

நீ தின்று போட்டு குப்பைத்தொட்டிக்கு போகவேண்டியதெல்லாம்
அருங்காட்சியகப் பொருளாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கிறது
என் வீட்டு அலமாரியில்
அவ்வப்போது திறந்து மூடும் போதெல்லாம்
இரசனை கூடிமொய்க்கிறது

மிதிவண்டி இருந்தும் மிடுக்காய் நடக்கும் உன்பின்னால்
ஆறுமைல் நானும் நடந்ததை நினைத்து
சிரிப்பதா அழுவதா ஒன்றும் சொல்வதற்கில்லை
கிறுக்குத்தனமென என் நண்பன் சொன்னது மறையாது ஞாபகத்தில்..
நீ நமட்டுச்சிரிப்போடு கடந்திருந்தாய்.



பலாப்பழத்தை மொய்க்கும் ஈக்களென எத்தனைபேர் தான்
கணக்கிட்டுச் சொல்வதற்குள் காலம்போய்விடும்
மறுமணி அடிப்பதற்குள்
மத்தியானம் இரவென எதுவும் நிரந்தரமாக இல்லாமல் போயிருந்தது

நாட்கள் மாதங்களாக மாதங்கள் வருடங்களாக
மெல்ல திறந்து புன்னகை பூத்து
நான் எதிர்பார்த்த அந்த மூன்று சொல்லைத்
திக்கித்திணறிச் சொல்லி முடிப்பதற்குள் என்னுயிர் போய் வந்தது
நீயும் சொன்னாய் மகிழ்வோடு
என் நண்பனிடத்தில் லவாவாக உடைந்து சிதறிய இதயம்
இன்னும் உள்ளுக்குள் புகைந்து கொண்டு தானிருக்கிறது

நாட்கள் கடக்க புதிய காதலாக
மீண்டும் துளிர்விட்டு எழும்புகிறது
எனது உண்மைக் காதல்
உன்மீது நேசத்தின் சாட்சியாக.
மேப்பிளவர் மரங்கள் என்மீது பூக்களை உதிர்க்கிறது.

கவிஞர் செள.நாகநாதன்

# ஜென் கவிதை




கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# இயற்கையை (சு)வாசி

அழகிய நிலமே அழகிய நிலமே
அற்புத விதையை வாங்கிய பின்
பழகிய இடத்தில் பக்குவம் செய்து
பண்பட்ட மரமாய் வளர்த்து விடு
மலர்கிற செடியே மலர்கிற செடியே
மகிழ்ச்சியில் தினமும் நீ வளர
புலர்கிற காலையின் புத்தொளி பெற்று
பூத்திடும் சூரியன் முகம் பார்ப்பாய்
வளைந்திடும் கிளையே வளைந்திடும் கிளையே
வாழ்வை மேலும் சிறப்பாக்க
களைப்பினை நீக்கி கணுக்களைக் கூட்டி
களிப்புடன் வளர்வாய் மேல்நோக்கி
பூக்கும் மலரே பூக்கும் மலரே
புன்னகையாலே கிளை பரப்பி
காக்கும் கிளையின் கை கால் நிரப்பி
கனவுகள் விதைக்க நீ சிரிப்பாய்
வளரும் மலர்கள் பிஞ்சென மாறி
வரவேற்கும் காய்க் கூட்டத் திரட்சியினை
வளர்ச்சியின் வேகப் பரப்பினிலே காய்கள்
வளர்ந்திடும் வசந்தக் கனியாக
இனிக்கும் கனியே இனிக்கும் கனியே
இயற்கை பூரிக்கும் தருணமிது
கனிகளின் வழியே காலத்தை நீட்டி
கருணை கூட்டும் இயற்கை அன்னை
மரத்தின் வாழ்வை நாம் பார்த்து
மனதினில் இருத்தி மாண்புறுவோம்
வரம் பல தந்திடும் இயற்கையினை
வாழ்வென வாழ்வெனக் காத்திடுவோம்.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# சத்தம் போடாதே

ஆகாய வெளியில்
கருமேகம் சூழ
மழை ஆர்பாட்டமாய்
மண்ணில் இறங்க
தனி ஆவர்தனம்
வாசிக்கிறார்கள்
இடியும்,மின்னலும்
ஒலியும் ஒளியுமாய்.



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# 1995 மார்ச்சு மூன்று

ஆண்டுகள் இருபத்தி யெட்டு ஓடிவிட்டன,
ஆயிரம் பொய்கள் சொல்லி மணக்காமல்,
அருந்ததி பார்த்து அம்மி மிதித்து,
ஆருயிர் துனையைப் பெற்றோர் முன்னிலையில்
ஒரேயொருமுறை போய்ப்பார்த்து மருதமலை முருகன்
தேர்வுசெய்து தந்தனனென எண்ணி வடவள்ளி
வாழ்ந்த சுந்தரவல்லியை, நற்றமிழ்ச்சேடியாம், மஞ்சுளாவையென்
ஆழ்மனத்தில் துணைவியராய் ஏற்றுமகிழ்ந்த நன்னாளிது!

இணையர்கள் எம்வாழ்வில் திருமணத்தின்பின் ஆருயிர்க்காதல்
இதயத்தில் மலரவே செய்தது எண்ணற்ற
கருத்து வேறுபாடுகள் சிறுசிறு ஊடல்கள்
வந்து வந்தவழியிலே அவைமீளசென்ற பின்பே!
ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள
ஒருசில வாண்டுகள் வேண்டுந் தானே!



ஆண்டுகள் ஓடவோட அறிதலும் புரிதலும்
அரவணைப்பும் கூடக்கூட ஊடலும் குறையக்கண்டேன்!
ஊடலின்பின் கூடல்சுகமென அகப்பொருள் சொன்னாலும்
கூடலின் இனிமையைவிட ஊடலின்வலி தகிகக்கண்டேன்!
கூறுவேனதனால் கூடுதல்குறையினும் பரவாயில்லை இணையர்களே,
ஊறுதரும் ஊடலைக்கூடிய மட்டும்தவிர்த்து வாழுங்களேன்!

களவையும் கற்பையும் கொண்டாடிய தமிழகத்தில்
கல்யாணம் செய்ததன்பின் காதலிப்பதேநலம் பயக்கிறதென்று
யானுரைத்தால் கோபிப்பீரோ மதிமயங்கிய காதலர்களே!
காதலிக்க காதலனோ காதலியோ கிடைக்காவிட்டால்
கல்லூரி வாழ்வென்ன கசந்தா போகும்?
கற்பன கற்று கற்றபின் பொருளீட்டி
பெற்றோர் தேர்ந்தெடுத்துத் தந்திடும் துணைவரை
உற்றவுறவாய் கொண்டு இல்லறம் நடத்திடுக
என்றும்மை அடியேனினிந்த திருமண நாளில்வேண்டுதல்
என்பதெம் இளைஞர்களை நல்வழிப்படுத்தல் என்றகடனாலே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# வாய்மையே வெல்லும்

வாய்மையே வெல்லும் என்பதினை
வரலாறுகளும் சரித்திரங்களும்
காட்டி நின்றாலும்
நமது வாழ்க்கையில் எப்போது
பிரதிபலிக்கப் போகிறது என்றுதான் தெரியவில்லை

இன்றைய கலியுகத்தில்
"வாய்மையே வெல்லும்" என்பது
வெறும் வாசகமாகவும் வசனமாகவும் மாறிவிட்டது

இன்று நம்மில் பலர் வாழ்க்கையில்
எத்தனையோ பொய்மைகளாலும்
சதிகளாலும் சூழ்ச்சிகளாலும்
சூழப்பட்டு சிதைந்து
சீர்குலைந்திருப்பினும்




வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில்
"வாய்மையே வெல்லும்" என்ற
உள்ளக்குமுறலோடு
நடை போட்டுக்கொண்டு தானே
இருக்கிறோம்
இன்றுவரையில்

கவிஞர் முகம்மது வாரிஸ் பாத்திமா றிப்கா,இலங்கை திருகோணமலை

# மன அழுத்தம்

நிஜத்தின் வலியில்
கற்பனைகள் யாவும்
கண்ணாடிச்
சில்லுகளாய்
சிந்தும் இரத்தம்
நாளங்களில் உறைவுகளாய்

அடைக்கும்
அனைத்துச் சுற்றோட்டமும்

புவியோடுகளின்
உரசல்களாய்
மனவெளி அதிர்வுகள்
கண்ணோரக்
கருவலயங்களூடு
அணைகடந்த வெள்ளமாகும்



அழுதால் கண்கள்
சுத்தமாகி தெளிவாகுமாம்
மன அழுத்தம் குறையுமாம்
காயப்படுத்தலின்
காரணிகளுக்கு
அழுது தீர்த்து நன்றி கூறுங்கள்.

பலரின் உறக்கமில்லா
இரவுகளுக்கு சிலரின்
இரக்கமில்லா
இதயங்கள் மட்டுமல்ல
பிடிவாதங்கள் கூடக்
காரணமாகலாம்

காயப்பட்டுப்
போகாமல் காத்துக்
கொள்ளுங்கள்
தனிமை மிகவும் கொடிது.

கவிஞர் ஷெண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# நிறங்கள்

ஏழு வண்ணங்கள் இணைந்ததால் தான்
எழில்மிகு வானவில்லும் தோன்றுதே!
பல வண்ணங்கள் இணைந்தே
ஓவியமும் அழகாய் மாறுதிங்கே!
அகமதில் தூய்மையான
வெள்ளை நிறமதில் வீற்றிருக்க
புறத்திலே நிறம் கொண்டு
பாகுபாடு பார்ப்பதும் தான் ஏனோ?
விழியில்லா மனிதருக்கு
நிறமிருந்துதான் என்ன பயனோ?
நிறமென்னும் புற அழகை
விழிகளினால் தேடி
அகமென்னும் உள்ள
அன்பான அழகை தொலைத்து விடாதே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# இளந்துளிர்

மொட்டிலே மலர்ந்த
மெல்லிசை கீதமே.
தொட்டிலிலே தவழ்ந்த
துள்ளிசை தென்றலே.
வருடிய காற்றுக்கும்
வசந்தத்தை அளித்து.
இனியோர் வரமாய் மீண்டும்
மொட்டினிலே துளிர்ப்போமா.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# அச்சம் தவிர்

உச்சம் தொடும் எண்ணம் இருந்தால்
அச்சம் தவிர் என்றும் அகத்தினில்

துச்சம் எனவே துன்பம் நினைத்திடில்
மிச்சம் என்றும் வெற்றியே வாழ்வில்

நச்சுக் கதைகள் செவிகளுள் நுழைந்தால்
எச்சமாய்ப் பிடிங்கி எறிந்திடு வெளியில்

இச்சமயம் நெஞ்சில் கொண்டிடு துணிவு
சச்சரவின்றி ஏற்றே சிறந்திடு அடைவு

முச்சந்தியாக துன்பம் முட்டிடும் போதும்
தச்சனென இன்பம் செதுக்கிடு நாளும்




மச்சமுள்ள வாழ்வு தட்டுமுன் கதவு
அச்சமதை மனதில் நீக்கிடும் பொழுது

பச்சயமான தாவரம் செழிப்பின் ஆதாரம்
நிச்சயமாய் அதுபோல் உனக்கில்லை சேதாரம்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)

# துணிந்து நில்

அடங்கியது போதும்
ஒடுங்கியது போதும்

அடுக்களைக்குள் கனவுகளை
எரித்தது போதும்



விமர்சனம் கண்டு
விழுந்தது போதும்

முடியாது என்று
முடங்கியது போதும்

தூற்றியவன் உன்னை போற்றிட
எதிர்த்தவன் எதிரில் நிற்கவே அஞ்சிட

கனவுகளை நிஜமாக்கி வெற்றி வாகை சூடிட
இன்றே துணிந்து நில் மனமே

கவிஞர் சனுபா தாஹிர்,இலங்கை

# கண்ணப்ப நாயனார்

## (பாகம் - ஒன்று)

கண்ணப்ப நாயனார் அவதரித்தது பழைய நகரம் உடுப்பூர்
எண்ணிய எண்ணாங்கு வாழும் வேடுவர்கள் வாழும் ஊர்
வண்ண மயமான காடுகள், மலைகள் இவர்கள் சொந்த ஊர்
திண்ணிய குறவர்கள் மிருகங்களோடு மிருகமா வாழும் ஊர்

அச்சமும் அருளும் என்னவென்று கேட்கும் முரட்டு வேடவர்கள்
பச்சையாகவும் அவிச்சியும் கிழங்கும் மாமிசமும்  தின்பார்கள்
துச்சமான மனநிலையில் மான அவமானம் தெரியாத முரடர்கள்
நிச்சயமான வாழும் நீதி நெறிகள் அற்றவர்ளின்மன்னன் நாகன் .

மன்னன்  மனைவி தத்தை வேடவர்கள் இளவரசி கர்ப்பமுற்றாள்
தன்னைப் போலவே  ஒரு புலிக்குட்டியை,  ஆண் மகவை ஈன்றாள்
முன்னைவிட விண் அதிர வாத்தியங்கள் முழங்க கொண்டாடினர்
கன்னலொடு தித்திக்கும் பிள்ளைக்கு சூட்டிய பெயர் திண்ணன்

மலை, மலை சூழ்ந்த சிற்றூர் வேடர்கள் ஆடினார்கள் பாடினார்கள்
அலையென திரண்ட கூட்டம் நாகன் மழலையை அள்ளி எடுத்தார்கள்
விலை மதிப்பில்லா ஆபரணங்களால் அலங்கரித்து மகிழ்ந்தார்கள்
தலைவன் குழந்தை யானை, சிங்கம், புலிகளுடன் விளையாடினான்

நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக திண்ணன் வளர்ந்தான்
வாளும், வேலும் வில் வித்தைகளும் கற்று சிங்கம் போல் வளர்ந்தான்
நாளுக்கு நாள் வேட்டையாடி விளையாடி  பதினாறு .வயதை அடைந்தான்
தோளுக்கு மேல் வளர்ந்த திண்ணனை அரசனாக்கினான் ராஜன், நாகன்

நண்பர்கள் நாணனும், காடனும் சூழ கன்னி வேட்டைக்குச்  சென்றார்கள்
திண்ணனின் தினவெடுத்த தோளும் வில் அம்பு, ஈட்டிகள்  பரபரத்தன
அண்ணார் எவர் வரினும் தலை தெறிக்க உயிர் விட்டு ஓடுவது தின்னம
பண்டிகை காலம்போல் வாத்தியங்கள் முழங்க மலையே கிடுகிடுத்தது




வேடர்கள் பின்தொடர  தலைவன் சிங்கம் போல் முன்னே சென்றான்
வேடுவர் தலைவன் நாகன் மகனின் கன்னி வேட்டை கண்டு பூரித்தான்
வேட்டையில் பயந்து ஓடும் கொலை மிருகங்களை விரட்டிச் சென்றான்
வேல் அம்புகளின் குறி தவறி மிரண்டு ஓடும் பன்றியை துரத்தினான்.

நெடுந்தூரம் ஓடிய பன்றி வலிமை குன்றி ஓடாமல்  ஓர் இடத்தில் நின்றது
சடுதியில் வந்த திண்ணன் வாளை உருவி பன்றியை  வெட்டி வீழ்த்தினான்
இடுதியில் இருந்த அம்பினால் அதை கீறி  நெருப்பில் வாட்டினார்கள்
தடுக்க இயலா தாகத்தினால் நீர் தேடி திருக்காளத்திமலையடி வந்தான்

மலைக்கு அருகில் ஓடும் பொன்முகலி நதியில் நன்னீர் முகந்தார்கள்
மலை சூழ்ந்த சோலை, வீசிய நறுமணக் காற்றில் தன்னை மறந்தான்
நிலை கொள்ளாமல் அங்கும் இங்கும் ஓடி மலையை வணங்கினான்
இதைக் கண்ட நாணன்,"தெரியுமா? மேலே குடுமி தேவர் இருக்கிறார்"

*(அண்ணார் : பகைவர்,
இடுதி: அம்புக் கூடு )

வேடர் தலைவன் கேட்டு,  ஈசனைக் காண காளத்தி மலைமேல் ஏறினான்
அட, இறைவன் மீது பெருங் காதல் உண்டாக மனம் ஒன்றி தேடினான்
இடது வலது என ஓடி உச்சியில் குடுமித் தேவர் தனியே இருக்கக் கண்டான்
உடல் சிலிர்த்து மனதில் ஆனந்தம், சிவனைத் தழுவி உச்சி மோர்ந்தான்.

தொடரும்

கவிஞர் ந.திருக்காமு,பாண்டி

# என் ராட்சசன்

அலை கடலென உன்னை
சுற்றி பலர் இருக்க

ஆசை ஆசையாய்
அந்த கூட்டத்தில் நானும்
ஒருவளாய்

உன் ராட்சச உருவத்தை
ரசித்து நிற்கிறேன்

வண்ண வண்ண
விளக்குகளால்
நீ ஒளிரும் போது



உன் தோற்றம்
கண்டு என் உள்ளம்
பூரிக்கிறது

தொலைவில் இருந்து
ரசிக்கும் காதலும்
அழகு தானோ

நான் உன் மேல் கொண்ட
காதலும் அப்படி தானோ

உன்னுடன் ஒன்றாகி
உயரம் மறந்து சுற்ற
ஆவல் கொள்கிறது
என் சிறு இதயம்

காதல் கொண்ட
மறு இதயமோ எட்டி
நின்று ரசிக்கிறது
உன் ராட்சஸ அழகை


ரங்க ராட்டினமே உன்
ராட்சச அழகை கண்டு
ரசிக்கும் நின் ரகசிய
காதலி இவள் ரதி.

கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# நிமிடம்

இந்த நிமிடம்
பொன் நிமிடம்
நான் நீயாகிய நிமிடம்
இப்படியே உறைந்து விட
வேண்டும் இந்நிமிடம்
உன்னோடு என் நிமிடம்!

எத்தனை கனவுகள்
களவு போன நிமிடம்
அத்தனையும் உனக்கான
என் நிமிடம்
சேர்க்கின்றேன் உனக்கான
சில நிமிடம்
கோர்க்கின்றேன் அப்படியான
பல நிமிடம்!



உயிரே நீ பிரியும் நிமிடம்
உயிரும் அற்றுப்
போகும் அந்நிமிடம்
முழுமதியின் முகம்
காணும் நிமிடம்
மூச்சே நின்றுவிடும்
ஓர் நிமிடம்!

உள்ளம் படபடக்கும்
பல நிமிடம்
ஏனோ நீ இல்லை
அந்நிமிடம்
விரல் கோர்த்து உலாவ
வேண்டும் சில நிமிடம்
அப்படியே தொடர வேண்டும்
நம் நிமிடம்!

உணர்ந்தேன் காதலின் சுகம்
ஒரு நிமிடம்
என் பிறவிப்பயனாய் நீ
வந்த நிமிடம்!

காரைக் கவிஞர் எழிலி

# மௌனம்

மௌனங்கள் என்றும் அழகானது
மனித வாழ்வில் என்றுமே
அதுவே தனி சிறப்பானது
வாழ்க்கையின் இனிய பயணங்களில்
ஆனால் சிலரின் மௌனம்
உள்ளத்தில் நீங்காத ரணமானது
நீ பேசாத மௌனங்கள் போன்று என்னவளே.



கவிஞர் பேரா.முனைவர்.அக.வீரவன்சாரா,வளையமாதேவி

# அழகு



ஈரடியில் அழகு
வாசுகியின் வள்ளுவம்
ஓரடியில் அழகு
என்னவளின் புருவம்

கவிஞர் லா.பெனிஸ்,நெல்லை திசையன்விளை

# உதயம் காணுது அவளின்றி

இதயங்கள் இணைந்து
கண்டது முப்பத்தி ஒன்பது ஆண்டு
இன்று காணது இது நாற்பத்தி ஓர் ஆண்டு
உதயம் காணுது அவளின்றி
இதில் வாடியது இரண்டு ஆண்டு

மகீயே உன்னை மறக்காது
சகியே உன் அன்பு நிறைந்தது
மகிழ்ந்தோம் இதில் பல ஆண்டு
கலங்கியது சென்ற இரண்டு ஆண்டு

நீ இன்றி எனக்கு எல்லாம் போச்சு
நீ இருந்தும் நான் காண்டது இன்பம்
நீ மேலிருந்து எனை வாழ்த்துகிறாய்
நீயும் ஒரு பெண் தெய்வமாய்



நீங்காத நினைவுகளில் உன்
நினைவை சுமந்து சுமை தாங்கியாய்
நின்று கொண்டு தனித்தே நிற்கிறேன்
என்றும் உன் நினைவு கொண்டு

என்னவளே உன் புகழ் ஓங்கவே என
என் கவிதை பாடி நான் அடைந்தேன் ஒரு அமைதி
உன் நினைவு நாளிலே
உன்னை வணங்கி நின்றேனே

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# குற்றால குறவஞ்சி

தென்றல் சாரல் தாலாட்டும் பொதிகை மலை

தமிழ் புலவர்களின் ஆஸ்தான முதன்மையான
அகத்திய தமிழ் மாமணி வாழ்ந்த மலை



பொதிகையில்
மலைகள் நிறைந்த
இடம் தனில்... அற்புதமான
மூலிகைகளின் ஊடே பாய்ந்து
வரும் நதிநீர்

பலவழிதடங்களை உருவாக்கி
பல நாமங்களில் கொட்டும் நீர்வீழ்ச்சிகளாய்.

ஆர்பரிக்கும் அருவிகளில் தான் நீராடினோமெனில்
கலங்கிய சித்தமும் தெளியுமே.

பச்சை போர்வை போர்த்திய இயற்கை வனம் தனில்
சில்லென்ற தென்றல் தேகத்தைத் தீண்டுமே

தூவும் மழைச்சாரலிலும் கொட்டும் பனிதனிலும்
மக்கள் கூட்டம் அலைமோதுமே.

மழையில் நனைந்தலும்
தலைவலியோ காய்ச்சலோ
நம்மை அண்டாத காரணம் அறிவீர்களா.

ஆம் என் ஐயன் குற்றலா நாதரே
அனைவருடைய தலைபாரத்தையும்
தனதாக்கிக் கொள்கிறார்.

ஆறுகால பூஜையிலும் இவருக்கு
அபிசேகம் வெந்நீரில் தான் அறிவீர்களா

இவரைப் போற்றி பாடப்பட்ட பாமாலையே
குற்றால குறவஞ்சியாம்

பிறவி பயனை அடைந்தேனே
இங்கே பிறந்ததினால்

கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# சர் சந்திரசேகர வெங்கட ராமன்

திருச்சிசார் திருவானைக் காவலண்மை ஊர்தோற்றம்!
பத்தொன்பது நூற்றினது எண்பத்து எட்டதனில்
நவம்பரிலே ஏழாம்நாள் அன்னவர்தாம் முகிழ்த்தாரே!
பள்ளிதனின் படிப்பதுவோ விசாகப்பட் டினநகரே!
இளங்கலையும் முதுகலையும் சென்னையின் மாநிலத்துக்
கல்லூரி தன்னிலேயே! கொல்கத்தா சீர்தலைமை
அலுவலகத்தே கணக்காளர் பணியேற்றார்! பின்னரவர்
கொல்கத்தா பல்கலையின் கழகத்தே இயற்பியலின்
பேராசிரி யரானாரே! பெங்களூரில் இந்தியத்து
அறிவியலின் கழகமதைத் துவக்கிட்டார்! பதினைந்து
ஆண்டளவும் ஆய்வுப்பணி நேர்தொடர்ந்தார்! தன்பெயரில்
ராமனாய்வுக் கழகத்தை நிறுவினாரே! வாழ்நாளின்
இறுதிவரை இயக்குநராய்ப் பணிபுரிந்தார்! இங்கிலாந்து
ராணியார்தாம் "சர்"பட்டம் வழங்கிட்டார்! நாட்டரசு
மாண்"பாரத ரத்னா"தனைச் சூட்டியதே! திருச்சிதனில்
துளிர்த்தவரோ பெங்களூரில் வாழ்விறுதி கண்டாரே!
எண்பத்து இரண்டாண்டு வாழ்ந்தனரே! நற்றாதை
சந்திரசே கரப்பேரார்! ஈன்றவரோ பார்வதிப்பேர்
அம்மையே! நற்றுணைவி யோகசுந்தரி! சுயத்தேர்வே!
மன்றல்காண் போதினிலே பதின்மூன்று வயதினளே!
"நோபல்" "நைட்" விருதுற்றார்! "லெனின்"பேரில்
நல்லமைதி பரிசுற்றார்! ஆண்மகவு இருவருண்டு!
நல்"முனைவர்" பட்டமுற்ற மாணவர்கள் நால்வரொடு
மற்றமாணவர் நால்வராமே! "ராமன்"பேர் "விளைவ"தனைக்
கண்டறிந்தார்! அவர்போலே பலர்தோன்றல் மாணுடைத்தே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# மாற்றம் விளைந்திடுமா?

கிராமமோ நகரமோ காணும் இடமெல்லாம்
பதாகைகள், சுவரொட்டிகள் நீக்கமற நிறைந்துளதே!
பிறந்தநாள், மஞ்சள்நீர், கண்ணீர் அஞ்சலி,
திருமணம், அரசியல் கூட்டங்களுக்கு வரவேற்பென
காரணங்கள் பலவாக எண்மப் பதாகைகள்!
தெருப்பெயர் பலகைகள், வழிகாட்டிப் பலகைகள்
சாலைகள் கூடுமிடத்தின் சமிக்ஞை கம்பங்கள்
எல்லா இடங்களிலும் இடம்பிடிக்கும் பதாகைகள்!
சாலைகளின் இருபுறமும் நெகிழிக் கழிவுகள்!
வடிகால் அடைப்பாலே சாலைகளில் வழிந்தோடும்
சாக்கடைகள்! துர்நாற்றம் வீசும் தெருக்கள்!
ஆகாயத் தாமரைகளுடன் அசுத்தமான நீர்நிலைகள்!
குவிந்திருக்கும் குப்பைகள்! குண்டும்குழியுமாய் சாலைகள்!
இவையெல்லாம் இயல்பென்றே கடக்கின்ற மனிதர்கள்!
பூங்காக்களில் கடற்கரையில் பொதுமக்கள் கூடுகையில்
எங்கு பார்த்தாலும் இறைந்துகிடக்கும் குப்பைகள்!
குடிமக்கள் உடைக்கின்ற கண்ணாடி பாட்டில்கள்
உடையவிழ்ந்து உருளுகின்ற மதுவின் அடிமைகள்!
ஒவ்வொரு குடிமகனும் பொறுப்புணர்ந்து நடந்தால்தான்
ஊரெல்லாம் சுத்தமாகும்! சூழல் சுகமாகும்!
வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி, நகராட்சி
பொறுப்புடன் பணியாற்ற உண்டாகும் மாற்றங்கள்!
பொது இடத்தில் அசுத்தம் செய்பவர்க்கு
விதிக்க வேண்டும் கடுமையான தண்டனைகள்!
மக்கள் கூடுமிடங்களில் குப்பைத் தொட்டிகள்,
கழிப்பிட, குடிநீர் வசதிகள் ஏற்படுத்தல் அவசியமே!
மாற்றங்கள் விளைந்திட தேவை மனமாற்றம்!
அழகையும் தூய்மையையும் காத்திடத் துணைநிற்போம்!
வாழுமிடச் சூழலை மேம்படுத்தி பலனடைவோம்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# பூ விற்கும் பூந்தளிர்!

விதியை வெல்லவே வீதியின் ஓரத்தில்
உழைப்பே உயர்த்தும் என்பதை உணர்த்தவே
தொடுத்த மலர்களை உயர்த்தி பிடிக்கிறாள்
க(ச)ரத்தில் முழம் அளக்கக் கற்கிறாள்
சக்தியின் வடிவமாய் சாலையில் நிற்கிறாள்
காலத்தின் போக்கினில் தங்கமாய் ஒளிர்ந்திட
தனக்குத் தானாய் புடம் போடுகிறாள்
அம்மை அப்பனின் தள்ளாத வயதிலே
தாங்கிப் பிடிப்பேன் என்றே சொல்வதாய்
தளிர்க் கால்களில் நிமிர்ந்து நிற்கிறாள்



கவிஞர் ரவிஜி


# கவிஞாயிறு தாராபாரதி

(கட்டுரை)

## பிறப்பும் சிறப்பும்

"வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
விரல்கள் பத்தும் மூலதனம்"

என்னும் இடித்துரை வரிகளுக்குச் சொந்தக்காரர் கவிஞர் தாராபாரதி. 26 பிப்ரவரி 1947 இல் திருவண்ணாமலை மாவட்டம் ‘குவளை’ என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் ராதாகிருஷ்ணன். பெற்றோர் துரைசாமி, புஷ்பம் அம்மாள். இவரது துணைவியாரின் பெயர் சந்தானலட்சுமி. 34 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர்.ஆசிரியர் மற்றும் கவிஞர் ஆவார். தனது ஆசிரியர் சேவைக்காக தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர்.



"கவிஞாயிறு" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர். மணநாள் : 22.08.1974 (இல்வாழ்க்கைத் துணை சந்தான லட்சுமி), இவருக்கு இரு புதல்வர்கள், விவேகாநந்தன் மற்றும் முனைவர் லோகுதுரை.

## பணியாற்றிய பள்ளிகள்

சித்திரக்கூடம்- அச்சிறுப்பாக்கம் ஒன்றியம்
பரனுர் - காட்டாங்குளத்தூர் ஒன்றியம்,
காமராசபுரம்- கூடுவாஞ்சேரி.

# கவிஞாயிறு தாராபாரதி

(கட்டுரை)

**பெயர்க்காரணம் குறித்து கூறுகையில்,**

"தாராபாரதி என்பது என் எழுதுகோலின் சுட்டுப்பெயர். தாயின் மடியில் சூட்டிய பெயர் இராதாகிருட்டினன். தமிழின் மடியில் சூட்டிய பெயர் தாராபாரதி. எனது இயற்பெயரில் முன்பாதியை (ராதா) முன்பின்னாகத் திருப்பிப் போட்டு, என்னுடைய கவிதை ஆசான் பாரதியின் பெயரை இணைத்துக் கொண்டேன்.

முன்னோடிக் கவிஞர்களாக எத்தனையோ கவிஞர்கள் இருக்க, எனது ஆசானாகப் பாரதியை ஏற்றுக் கொண்ட காரணம் என்னவெனில், பாரதி — அந்தத் தலைப்பாகைக் கவிஞனின் தமிழ் படித்துக் கவிஞனானவன் நான்" என்றார்.

**கல்விப் பணி**

புதிய பாடத்திட்ட உயர்மட்ட குழுவில், ஆசிரியர் கையெடுகள் தயாரிப்பில், வினா வங்கி உருவாக்கத்தில் பங்கு பெற்றமை.

**கவிதைப் பணி**

இலக்கிய வீதி, கவிதை நடை வண்டி

**படைப்புகள் - கவிதை நூல்கள் 6**

புதிய விடியல்கள்
இது எங்கள் கிழக்கு
விவசாயம் இவர் வேதம்
தாராபாரதி கவிதைகள்
இன்னொரு சிகரம்
பூமியை திறக்கும் பொன்சாவி

## படைப்புகள் - உரைநடை 2

- பண்ணைப்புரம் தொடங்கி பக்கிங் காம் வரை
- வெற்றியின் மூலதனம்

## வானொலி தொலைக்காட்சிகளில்

கல்வி ஒளிபரப்புகள் எல்லோருக்கும் கல்வி சான்றோர் சிந்தனை கவிதை துளி கவியரங்குகள் கவிதை பட்டிமன்றம் வள்ளுவர் காட்டும் வழி காண்போம் கற்போம் வாழ்க்கை கல்வி சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

## சன் தொலைக்காட்சி

கவிராத்திரி (கவிக்கோ அப்துல் ரகுமானுடன்)

இன்தாம் - தமிழ் இணையம், இவற்றில் கவிதைகள் வாசிப்பு.

## சென்னை தொலைக்காட்சி

கவியரசர் இளந்தேவன் தலைமையில் கவிஞர் அப்துல் காதருடன் கவிதை வழக்காடு மன்றம்.

## பரிசுகள் விருதுகள்

- முதல் பரிசு - கல்லூரி கவிதை போட்டி (1974)
- வெள்ளி பதக்கம் - கல்லூரி கட்டுரை போட்டி
- தங்க மோதிரம் - தமிழ் எழுத்தாளர் சங்கம் (வாசவன் விருது 1990)
- கண்ணதாசன் நினைவு விருது (இலக்கிய வீதி 1990)
- கவிஞாயிறு - விருது 1993
  (திருவள்ளுவர் இலக்கிய மன்றம் வாணுவம்பேட்டை)

# கவிஞாயிறு தாராபாரதி

(கட்டுரை)

காலத்தோடு கலந்த நாள் - 13.05.2000

**தாராபாரதியின் ஒரு கவிதை**



உட்கார் நண்பா, நலந்தானா? - நீ
ஒதுங்கி வாழ்வது சரிதானா?
சுட்டு விரல்நீ சுருங்குவதா? - உன்
சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா?
'புல்லாய்ப் பிறந்தேன் நானென்று' - நீ
புலம்ப வேண்டாம்; நெல்கூட
புல்லின் இனத்தைச் சேர்ந்ததுதான் - அது
பூமியின் பசியைப் போக்கவில்லை?
'கடலில் நான்ஒரு துளி'யென்று - நீ
கரைந்து போவதில் பயனென்ன?
'கடலில் நான்ஒரு முத்தெ'ன்று - நீ
காட்டு; உந்தன் தலைதூக்கு!
வந்தது யாருக்கும் தெரியாது - நீ
வாழ்ந்ததை உலகம் அறியாது;
சந்ததி கூட மறந்துவிடும் - உன்
சரித்திரம் யாருக்கு நினைவுவரும்?
திண்ணை தானா உன்தேசம்? - உன்
தெருவொன் றேயா உன்னுலகம்,
திண்ணையை இடித்துத் தெருவாக்கு - உன்
தெருவை மேலும் விரிவாக்கு!
எத்தனை உயரம் இமயமலை! - அதில்
இன்னொரு சிகரம் உனதுதலை!
எத்தனை ஞானியர் பிறந்த தரை - நீ
இவர்களை விஞ்சிட என்னதடை?
பூமிப் பந்து என்னவிலை? - உன்
புகழைத் தந்து வாங்கும்விலை!
நாமிப் பொழுதே புறப்படுவோம் - வா
நல்லதை எண்ணிச் செயல்படுவோம்!

**கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்**


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
அடுத்தவரோடு ஒப்பிட்டு
உன்னை நீயே தாழ்த்திக்
கொள்ளாதே உலகத்திலே
சிறந்தவன் நீ தான் இதை
எப்போதும் நம்பு..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com